**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 562 / 2024**

| Deposition of Witness for | Prosecution PW5<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Udaya Suriyan |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21st day of April, 2026.

**(A2, A3, A6 are present. A1, A4, A5 are absent, Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

**நேரம் 11.55 மணி**

நான் தற்போத மீஞ்சூரில் வசித்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. என் முன்னிலையில் போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை. எந்த பொருளையும் கைப்பற்றவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

25-11-2023 ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்தபோது அப்போது நான் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த வாக்குமூலத்தில் 25-11-2023 அன்று காலை 10.30 மணிக்கு நானும், எனது நண்பர் இளமாறன் என்பவரும் வீட்டு பிரச்சனை சம்பந்தமாக மீஞ்சூர் காவல் நிலையம் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

அப்போது போலீசார் ஒருவரை காட்டி அவர் தன்னுடைய பெயர் நரேஷ்குமார் என்று சொன்னதாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அவரும் அவருடைய கூட்டாளிகளும் சேர்ந்து ஜெயப்பிரகாஷ் என்பவரை மிரட்டி மோட்டார் சைக்கிளில் கடத்தியதாகவும், அதன்பின்னர் துப்பாக்கி காட்டி மாமூல் கேட்டதாகவும் மேற்படி சம்பவம் 06-02-2023 அன்று நடந்ததாகவும், அந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய Hero Splendor Pro மோட்டார் சைக்கிளையும், Indica Car TN 01 AA 8950 என்ற இன்டிகா காரையும் என் முன்னிலையில் அடையாளம் காட்டி ஆஜர் செய்ததாகவும், வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதை போலீசார் கைப்பற்றியதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.